செ.வெ. எண் : 975                                                    4/11/2010

பொதுத் (தேர்தல்கள்–1) துறை

செய்தி வெளியீடு

1.1.2011–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத்திருத்தம் 25.10.2010 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது.

2. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/நீக்க/திருத்த/இடம் மாற்றுதல் செய்ய விண்ணப்பங்களை அளிப்பதற்கான கால அவகாசம் 25.10.2010 முதல் 09.11.2010 வரை என்று இந்திய தேர்தல் ஆணையம் நிர்ணயித்திருந்தது. விண்ணப்பங்களைப் பெறுவதற்கு சிறப்பு முகாம்கள் 30.10.2010 அன்றும் 07.11.2010 அன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

3. நவம்பர் 5–ஆம் தேதியன்று கொண்டாடப்படவுள்ள தீபாவளிப் பண்டிகை காரணமாக வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியினை நீட்டிக்கவேண்டும் என்றும் 07.11.2010 அன்று விண்ணப்பங்களைப் பெறுவதற்காக நடத்தப்படவிருக்கும் சிறப்பு முகாமினை மற்றொரு வாரக்கடைசிநாளில் நடத்தவேண்டும் என்றும் கோரிக்கைகள் வரப்பெற்றன. தற்போது இந்திய தேர்தல் ஆணையம், பெயர் சேர்க்க/நீக்க/திருத்த/இடம் மாற்றுதல் செய்ய விண்ணப்பங்களை அளிப்பதற்கான கால அவகாசத்தை 13.11.2010 வரை நீட்டித்து ஆணையிட்டுள்ளது. 07.11.2010 அன்று நடைபெறுவதாக இருந்த சிறப்பு முகாம் 13.11.2010 அன்று நடைபெறும். இறுதி வாக்காளர் பட்டியல்கள் முன்னர் நிர்ணயித்தபடி 05.01.2011 அன்று வெளியிடப்படும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9